# வடக்கே ஓர் வால் நட்சத்திரக் கூட்டணியும் தெற்கே ஓர் நம்பிக்கை நட்சத்திரக் கூட்டணியும்

பெங்களூருவில் கடந்த 17.07.2023ஆம் நாள் நாடுதழுவிய 26அரசியல் கட்சிகளின் கூட்டம், எதிர்வரும் 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சியினை எப்படி தேர்தல் களத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கிடவும், கலந்துரையாடவும், அதற்கான யுக்திகளை வகுத்திடவுமான கூட்டு முயற்சியின் அடிப்படையில் கடந்தமுறை பீகார் மாநிலத்தின் தலைநகர் பாட்னாவில் நடைபெற்றபின் இங்கு நடைபெற்ற கூட்டத்தில் வரலாற்றுத் திருப்புமுனையை உருவாக்கும் முடிவுகளை நீண்ட ஆய்வுக்குப் பின் எடுத்துள்ளார்கள்.

பாட்னாவில் நடைபெற்ற முதல் கூட்டத்தில் 16 எதிர்க் கட்சிகள் கலந்து கொண்டுள்ளன. ஆனால், பெங்களூருவில் நடந்து முடிந்த கூட்டத்தில் 26 அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியுள்ளனர். அடுத்தக்கட்டமாக இந்தக்கூட்டம் மும்பையில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பெங்களூருவில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த அரசியல் கூட்டணிக்கு பெயரிட வேண்டுமென ஆலோசித்து ஒருமனதாக "INDIA" (இந்தியா) என்று பெயரிட்டிருக்கிறார்கள். "Indian National Developmental Inclusive Alliance" என்பது "INDIA" என்ற ஆங்கில எழுத்துகளுக்கான விளக்கமாகும். அதற்கு, தமிழில் "இந்திய தேசிய அனைத்துமக்கள் வளர்ச்சிக் கூட்டணி" என்பதாகும்.

இந்த அரசியல் கூட்டணிக்கு இடப்பெற்றுள்ள பெயர் என்பது இந்திய நாட்டு மக்கள் அனைவரையும் ஆச்சரியத்தோடும், எதிர்பார்ப்போடும் திரும்பிப்பார்க்க வைத்த ஓர் பொருள் பொதிந்த தலைப்பாகும். இந்தியாவை "இந்து ராஷ்ட்ரமாக்கும்" பாரதீய ஜனதாக் கட்சி, ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங் ஆகிய மதவெறிக் கட்சிகளின் நீண்டகாலத் திட்டத்தைத் தகர்த்து தரைமட்டமாக்குவதோடு, இந்தியா எப்பொழுதும் இங்கு வாழும் எல்லோருக்குமான இந்தியாதான் என்ற உணர்ச்சியையும், ஒற்றுமையையும் உருவாக்கும் நம்பிக்கை நட்சத்திரமாகும்! ஆம்! இந்தியாவில் வாழும் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் தெளிவான நம்பிக்கையூட்டும் "நம்பிக்கை நட்சத்திரமாக" (Pole star) உதயமாகியிருக்கிறது. இனி நாட்டின் தென்கோடியாம் கன்னியாகுமரியிலிருந்து, இமயத்தின் முகடான காஷ்மீர் வரையில், வாழும் அனைத்துத் தரப்பு மக்களும் அச்சமின்றி வாழலாம், வளரலாம் என்பதற்கான நம்பிக்கையின் சிகரமாக "INDIA" என்ற அரசியல் கூட்டணி அமைந்துள்ளது.

இந்த அரசியல் கூட்டணி காலத்தின் கட்டாயமாகவும், சரித்திர நிர்பந்தத்தாலும் இயல்பாக உருவான வரலாற்றுப் பரிணாமத்தின் வடிவமாகும்!! ஆனால், இந்தப் பொருள் பொதிந்த அரசியல் கூட்டணிக்கு எதிராக, தலைநகர் டெல்லியில் அவசரக் கோலத்தில் பாரதீய ஜனதாக்கட்சியின் அரசியல் கூட்டணியான தேசிய ஜனநாயக கூட்டணியின் (National Demacratic Alliance) கூட்டம் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் தலைமையில் 17,07,2023-ல் கூடியது.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

பிரதமர் நரேந்திரமோடியின் தலைமையில் கூடிய தேசிய ஜனநாயகக் கூட்டணி யின் கூட்டத்தில் தமிழ்நாட்டிலிருந்து எடப்பாடி பழனிச்சாமியும் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கூட்டணியின் கூட்டத்திற்குப் பின்னர் பிரதமர் நரேந்திரமோடி பத்திரிக்கையாளர் களிடம், பெங்களூருவில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டணியான (INDIA) பற்றி விமர்சிக்கும் பொழுது 'எதிர்மறைக் கூட்டணி' (Alliance of Negativity) என விமர்சித்துள்ளார். எதிர்மறைச் சிந்தனை களுடன் தொடங்கிய கூட்டணிகள் இலக்கை அடையமுடியாது என்றும் சிதைந்து போகும் என்றும் விசுவாமித்திரரைப் போல சாபம் விட்டுள்ளார்.

**எந்தக் கூட்டணி சிதைந்துபோகும் என்பதை மட்டுமல்ல, எந்தக் கூட்டணி 2024ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என்பதையும் இன்றைய பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் ஆச்சரியத்தோடும், அதிர்ச்சியோடும் நிச்சயம் காண்பார். இயல்பாக இருக்கின்ற இந்தியாவை அதன் இயற்கைத் தன்மையை முற்றிலுமாக மாற்றி அதற்கு "இந்து ராஷ்ட்ரம்" என "நாமகர்ணம்" சூட்டி, இந்தியத் துணைக்கண்டத்தின் இயற்கையான பன்முகத்தன்மையை தகர்த்துத் தரைமட்டமாக்கிட முயற்சிக்கும் பிரதமரின் கூட்டணி தானே இயல்பான இந்தியாவிற்கு எதிர்மறையான கூட்டணி?**

இந்தியாவின் இயற்கைப் புவியியல் தன்மைகளையும், வாழ்வியல் முறைகளால் வேறுபட்ட பல்வேறு தேசிய இனங்களின் உணர்வுகளையும், சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் பிரதமரின் கூட்டணிதான் எதிர்மறைக் கூட்டணி என்பதில் கிஞ்சிற்றும் யாருக்கும் ஐயமில்லை!! மாறாக அச்சமடைந்துள்ளனர்!!

"INDIA" என்ற "இந்திய தேசிய அனைத்துமக்கள் வளர்ச்சிக் கூட்டணி", பெங்களூருவில் நடைபெற்ற கூட்டத்தில் முழுமையான வடிவம் பெற்றமைக்கு தொடக்கத்தில் அடிக்கல் நாட்டிய பெருமையும், அதற்கான வரைபடமும் கொடுத்த சிறப்பும், பெருமையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்குதான் உண்டு என்பதை இந்திய நாட்டின் வரலாற்றில் யாராலும் திரைபோட்டு மறைக்கவியலாது!

2007-2023ஆம் தேதிய கழக நாளிதழான "முரசொலி"யின் தலையங்கத்தில், எடுத்துக்காட்டியபடி கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள் பொதுக்கூட்டத்தில், மார்ச் 1ஆம் தேதி மிகத் தெளி வாகவும், தீர்க்கமாகவும் மேடையில் காஷ்மீரத்து சிங்கம் பரூக் அப்துல்லா அவர்களும், பிகார் மாநிலத்தின் துணை முதல்வர் தேஜஸ்வி அவர்களும், உத்திரபிரதேச மாநிலத்தின் முன்னாள் முதல்வர் அகிலேஷ் அவர்களும் அமர்ந்திருக்க, பா.ஜ.க.வை வீழ்த்த நினைக்கும் அரசியல்கட்சிகள் எத்தகைய முடிவுக்கு வந்தாக வேண்டும் என்பதை முன்கூட்டியே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

"2024 நாடாளுமன்றத் தேர்தல் என்பது யார் ஆட்சி அமைக்க வேண்டும் என்பதற்கான தேர்தல் அல்ல. யார் ஆட்சி அமைத்துவிடக் கூடாது என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல் ஆகும்", என மிகத்தெளிவாகவும், தொலைநோக்கோடும் தெரிவித்துள்ளார்கள். கழகத்தலைவர் முதல்வர் தொலைநோக்குப் பார்வையுடன் தெரிவித்ததன் அடிப்படையில்தான் இந்த "INDIA" என்ற அரசியல் கூட்டணி மனமாச்சரியங்கள் எதுவுமின்றி உருவாகியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, மதவாத சக்திகளையும், பன்முகத் தன்மையையும் சீர்குலைத்து இந்திய அரசியல்சட்டத்தை செயலற்றதாக்கிடச் செய்யும் தீயசக்திகளையும் அப்புறப்படுத்திவிட்டு, ஒத்தக் கருத்துக்களை உருவாக்கி அதன்மூலம் இந்தியாவை சிதறுண்டு போகாமலும், நாட்டின் பன்முகத்தன்மை சிதறடிக்கப்படாமலும், இந்திய அரசியல் சட்டத்தின் உயரிய நோக்கங்களின் அடிப்படையில் (Aims and Objectives) ஓர் ஆட்சியை உருவாக்கிக் கொள்ளலாம் என்பதே கழகத் தலைவரின் உயரிய தொலைநோக்குச் சிந்தனை யாகும். அதுமட்டு மல்ல, இந்திய நாட்டின் ஜனநாயகத்தையும், பன்முகத் தன்மையையும், ஒற்றுமையையும், சோதனையான காலகட்டங்களில் காப்பாற்றியதும் அதற்காக பல்வேறு இழப்புகளையும் எதிர்கொண்டு செயற்கரிய பல தியாக வேள்விகளை இந்த தமிழ்மண்ணில் நடத்திக்காட்டி வரலாறு படைத்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மக்கள் மறப்பதற்கில்லை.

அத்தகைய தியாகங்களின் மீட்சியாகத்தான் இன்றைய அச்சமூட்டும் அரசியல் சூழ்நிலையில், விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், துணிச்சலாக பெங்களூருவில் நடைபெற்ற எதிர் கட்சிகளின் கூட்டத்தில் காலத்திற்கேற்ற சரியான அரசியல் கூட்டணி அமைவதற்கு ஆணிவேராகவும், உந்துசக்தியாகவும் கழகத்தலைவர் பணியாற்றியிருக்கிறார் என்பதை யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ இயலாது. இவரது அரசியல் அணுகுமுறையையும், ஆற்றலையும் கண்டு அதிர்ச்சியடைந்த நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை குடும்பக்கட்சி என்றும், ஊழல் கட்சி என்றும் கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

பிரதம அமைச்சரின் கூட்டணியான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் பெற்றிருக்கும் கட்சிகள் மீது உள்ள குற்றச்சாட்டுகள் பற்றியும், குறிப்பாக அ.தி.மு.க.வைச் சார்ந்த எடப்பாடி பழனிச்சாமி மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றியும் சிறிதளவுகூட கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் இரும்புத்திரை போட்டு மறைத்தாலும், மக்களின் பார்வையிலிருந்தும் கவனத்திலிருந்தும் எந்தச் சக்தியாலும் இந்த உண்மைகளை மறைக்கவியலாது. பெங்களூருவில் உருவாக்கப்பட்டிருக்கும் அரசியல் கூட்டணியான "INDIA" இந்திய நிலப்பரப்பில் பன்னெடுங்காலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் தேசிய இனங்க ளுக்கும், அவர்களது தனித் தன்மைகளைப் பாதுகாப்பதற்கும், இதன்மூலம் நாட்டின் ஒற்றுமைக்கு வழிகாட்டும் துருவ நட்சத்திர மாகவும், ஆம்! விடிவெள்ளியாக (Polestar) நிச்சயம் இந்திய மக்களுக்கு இருள்நீக்கிவழிகாட்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆனால், பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் பழுது பார்க்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் நாட்டுமக்களுக்கு எண்ணற்ற கேடுகளை உண்டாக்கி, மக்கள் தினம்தினம் அச்சத்தோடு வாழக்கூடிய, "மதிகெட்டான் சோலைக்கே" இட்டுச்செல்லும் வால் நட்சத்திரக் (Comet) கூட்டணியாகத்தான் செயல்படும். ஆம்! மக்களின் நிம்மதியை சீர்குலைக்கும்.

வடக்கே தலைநகர் டெல்லியிலிருந்து ஓர் வால்நட்சத்திரக் கூட்டணி (Comet Alliance), தெற்கே பெங்களூரிலிருந்து ஓர் துருவநட்சத்திரக் கூட்டணி (Polestar Alliance) உருவாகியிருக்கிறது.

"INDIA" என்ற இந்த அரசியல் கூட்டணி, பாரதீய ஜனதாக் கட்சியால் சிதறடிக்கப்பட்ட ஒற்றுமை உணர்வையும், மதச்சார்பற்ற தன்மையையும், பன்முகக் கலாச்சாரத்தையும் செப்பனிட்டு, சீர்செய்து பாதுகாக்கும்.

அதுமட்டுமல்ல, இந்திய அரசியல்சட்டம், நாடு விடுதலை பெற்றபின் மக்களின் உணர்வுகளை ஒன்றுதிரட்டி மக்களால் உருவாக்கப்பட்ட சட்டமாகத்தான் 1949 நவம்பர் திங்கள் 26ம் நாள் நாட்டு மக்களுக்கு சமர்ப்பித்து, அதன்வழி நடப்பதற்கான உறுதிமொழியும் தரப்பட்டுள்ளது (In our Constituent Assembly this twenty sixth day of November, 1949, do hereby adopt enact and give to ourselves this Constitution). கடந்தகால பாரதீய ஜனதாக்கட்சியின் ஆட்சியில் சிதைத்துச் சின்னாபின்னமாக்கப்பட்ட இந்திய அரசியல்சட்டத்தின் நோக்கங்களையும், சிந்தனை களையும், கட்டமைப்பையும் மீண்டும் "INDIA" என்ற அரசியல் கூட்டணியின் மூலம் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று சாதனை படைப்போம்!

"INDIA" வெற்றியின் மூலம் இந்தியாவைக் காப்போம்!!

இந்த லட்சிய முழக்கத்துடன் கழகத்தலைவரைத் தொடர்ந்து பல லட்சக்கணக்கில் அணிவகுப்போம், அணி, அணியாக ஆர்ப்பரிக்கும் அரிமாக்களென வாரீர்!!



தருமபுரி மாவட்டம் – பாப்பாரப்பட்டியில் விடுதலைப் போராட்ட வீரர் தியாகி சுப்ரமணிய சிவா அவர்களின் 98ஆவது நினைவு நாளையொட்டி அவரது நினைவிடத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி,எஸ்.பி.வெங்கடேஸ்வரன், தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி,தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் சூடப்பட்டி சுப்ரமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.ஜி.சேகர்,தருமச்செல்வன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர்க் கழகச் செயலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## கடந்த 3 ஆண்டுகளில் சுங்கம்- வருவாய்ப் பிரிவினரால் பல்வேறு துறைமுகங்களில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு என்ன?

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



*புதுடெல்லி, ஜூலை 25-* நாட்டிலுள்ள பல்வேறு துறைமுகங்களில் குறிப்பாக தனியார் துறைமுகங்களில் 24/7 பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை வழங்குவது குறித்தும் சட்டவிரோதமாக கடத்தப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட தடை செய்யப்பட்ட பொருட்கள் அதன் மதிப்பு குறித்தும் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் வருமாறு:-

நாட்டிலுள்ள பல்வேறு துறைமுகங்களில் குறிப்பாக தனியார் துறைமுகங்களில் சுங்கம் மற்றும் வருவாய் புலனாய்வு போன்ற அரசு நிறுவனங்களால் 24/7 பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

தடை செய்யப்பட்ட பொருட்கள் சட்டவிரோதமாக கடத்தப்படுவது பற்றி ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா? வழக்கமான இறக்குமதி அல்லது ஏற்றுமதி போல் காட்டிக் கொண்டு செல்லப்படுகிறது:

அப்படியானால், கடந்த மூன்று ஆண்டுகளில் சுங்கம் மற்றும் வருவாய் புலனாய்வுப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் விவரங்களுடன் நாட்டின் பல்வேறு துறைமுகங்களில் பதிவாகிய/கவனிக்கப்பட்ட இதுபோன்ற நிகழ்வுகளின் விவரங்கள் யாவை?

கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு துறைமுகங்களில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு, ஆண்டு மற்றும்துறைமுகம் வாரியாக?

இவ்வாறு அவர் வினா எழுப்பினார்.

அதற்கு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்த சோனோவால் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

முக்கிய துறைமுகங்கள் துறைமுக அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. கப்பல் மற்றும் நீர்வழிகள். நாட்டின் முக்கிய துறைமுகங்களுக்கு மத்திய தொழில் பாதுகாப்புப் படை பாதுகாப்பு அளித்து வருகிறது. பெரிய துறைமுகங்களில் உள்ள டெர்மினல்கள், எக்ஸ்ரே கண்டெய்னர் ஸ்கேனர் மற்றும் மொபைல் ஸ்கேனர் மூலம் டிரைவ் மூலம் சரக்குகளை ஸ்கேன் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள முக்கிய துறை முகங்கள் (அல்லாத பெரிய துறைமுகங்கள்) தவிர மற்ற துறைமுகங்கள் மாநில அரசு/ மாநில கடல்சார் வாரியங்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

11.03.2016 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் முக்கிய துறைமுகங்கள் (பெரிய அல்லாத துறைமுகங்கள்) தவிர மற்ற அனைத்து துறைமுகங்களிலும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை இணங்குவதற்காக உள்துறை அமைச்சகம் விநியோகித்துள்ளது.

சுங்கத் துறை, மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் துறைமுகங்களில் ஒரு சட்ட அமலாக்க நிறுவனம் ஆகும். பல்வேறு கடல் துறைமுகங்களில் தடை செய்யப்பட்ட பொருட்களின் பறிமுதல் விவரங்களை பார்க்கும் போது அதிக மதிப்புள்ள எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் மற்றும் எலெக்ட்ரிக் பொருட்கள் இருப்பது தெரிகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

## சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மற்றும் அஸ்தம்பட்டி மண்டலப் பகுதிகளில் ஆய்வு!

### சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன் ஆய்வு!

*சேலம், ஜூலை 25 -* சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்.28ல் வண்டிப் பேட்டை பகுதியில் குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளை ஆய்வு செய்தும், பெரியார் நகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாடு வாரிய அடுக்குமாடி குடியிருப்பில் நடைபெற்று வரும் கட்டடப் பணிகளை ஆய்வு செய்த போது பொதுமக்கள் அடுக்குமாடி குடியிருப்புகளை வெகு விரைவில் பணிகள் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு வர ஏற்பாடு செய்து தரும்படி கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு ஆறு மாதத்திற்குள் கட்டடப்பணிகள் அனைத்தும் முடிவு பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் என உறுதி அளித்தார்.

அதன்பின் பெரிய எழுத்துக்காரர் தெருவில் நடைபெற்று வரும் பாதாளச் சாக்கடை பணிகளை பார்வையிட்டு இருபுறங்களிலும் உள்ள கழிவுநீர் வடிகால் அமைத்து சீர்செய்து தரும்படி பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். உடனடியாக இவ்வேலைகளையும் விரைவில் முடித்திடவும், செவ்வாய்பேட்டை நரசிம்மன் சாலையில் பொதுமக்கள் குறை தீர்க்கும் முகாமில் மேயர் ஆ.இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், ஆணையாளர் சீ.பாலச்சந்தர் ஆகியோர் பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றனர்.

இந்த வார்டில் (கோட்டம் எண்.28) ரூ.4 கோடி மதிப்பில் பல பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், லாரி மார்க்கெட்டில் நீர்தேக்கத்தொட்டி பணிகள் நடைபெற்று வருகிறது. நாய்கள் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை மையம் அமைக்கும் பணியும், சாலை வசதி, கழிவுநீர் வடிகால், தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் கொடுக்கப்பட்டுள்ள பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக தீர்வு வழங்கப்படும் என மேயர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் தெரிவித்தனர்.

கோட்டம் எண்.30ல் செவ்வாய்பேட்டை சின்ன எழுத்துக்காரத் தெருவில் நடைபெற்றுவரும் சாலைப் பணிகளை ஆய்வு செய்தும், மஜ்ஜித் தெருவில் மழைக் காலங்களில் மழைநீர் வெளியில் செல்ல முடியாத நிலை உள்ள காரணத்தால் கழிவுநீர் வடிகால் ஆழம் அகலப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தபோது இத்திட்டம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் செயல்படுத்தலாம் என்று கூறினார். சென்னகிருஷ்ணன் தெருவில் உள்ள கழிவுநீர் வடிகால்களில் மழைநீர் தேங்கா வண்ணம் மறுசீரமைப்பு செய்து தரும்படி கோரிக்கை வைத்தனர். இதனையும் உடனடியாக செய்து தர பொதுமக்களிடம் உறுதி அளித்தனர்.

ஆய்வின்போது கண்காணிப்பு பொறியாளர் ஜி.ரவி, உதவி ஆணையாளர் எம்.கதிரேசன், செயற்பொறியாளர்கள் திருமதி.க.திலகா, கூ.செந்தில்குமார், திருமதி. ஜெகதீஷ்வரி, உதவி செயற்பொறியாளர்கள் எஸ்.செந்தில்குமார், ரவிச்சந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர் திருமதி.அ. அம்சா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பொன். கலியமூர்த்தி**

**ஜூலை 25 (2011)**



**பூதலூர் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.**

**தஞ்சை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**பூதலூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநர், தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்புகளையும் திறம்பட வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**